## கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மனித வளங்கள் வலுவூட்டல் நிறுவகம் - 2014

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மனித வளங்கள் வலுவூட்டல் நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 18 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள 1979 இன் 11 ஆம் இலக்க மனித வளங்கள் வலுவூட்டல் நிறுவக வழிகாட்டியின் 23 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மனித வளங்கள் வலுவூட்டல் நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் படி நிலையான சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் நிறுவகத்தினால் தற்போது பயன்படுத்தப்படுகின்ற கொழும்பு பல்கலைக்கழகத்தினால் 1983 நவம்பர் 14 ஆந் திகதிய கடிதம் மூலம் கையளிக்கப்பட்ட 27.86 பேர்ச் காணி நிறுவகத்தினால் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்ட ரூபா 2,961,340 கிரயத்திலான மோட்டார் வாகனங்கள் தொடர்ந்தும் நிறுவகத்தினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும் அதன் நியாயப் பெறுமதியைக் காண்பிக்கும் வகையில் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டிற்காக அரசாங்கத்திடமிருந்து கிடைத்த மூலதன மானியம் ரூபா 7,276,370 தொகை மீண்டெழும் செலவினத்திற்காகச் செலவிடப்பட்டிருந்தது.

#### 2.2.3 போதியளவு அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

திறைசேரியின் அங்கீகாரமின்றி நிறுவகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட காப்புறுதி மேவுகை முன்மொழிவுத் திட்டத்திற்காக அபிவிருத்தி நிதியத்திலிருந்து ரூபா 1,000,000 தொகை மாற்றப்பட்டிருந்ததுடன் கலைக் குழுவின் கட்டளையின் படி பாடநெறி வருமானத்தில் 1 சதவீதத் தொகையான ரூபா 4,188,040 தொகை இந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் இதற்காக கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

வேலை நீக்கஞ் செய்யப்பட்ட விரிவுரையாளர் ஒருவரிடமிருந்து ரூபா 191,000 தொகையான இடர் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங் களுடனான தொடர்புகள் | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| நிதிப்பிரமாணம் 371 | திறைசேரி நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட இனங்காணப்படாத ரூபா 220,479 தொகையான முற்பணம் தீர்க்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) 2004 யூலை 29 ஆம் திகதிய பீஈடீ/25 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | திறைசேரி அங்கீகாரம் இன்றி ரூபா 22,537,408 கூட்டுத்தொகையான நிதி முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (இ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை மற்றும் 1979 நவம்பர் 13 ஆம் திகதிய 49 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று முறைப்படி பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 11,340,232 மிகையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 15,174,118 ஆக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் மிகை ரூபா 3,833,886 இனால் குறைவடைந்தமைக்கு மூலதன மானியம் ரூபா 7,403,000 இனால் குறைவடைந்தமையும் ஊழியர் சம்பளம் ரூபா 1,689,688 இனால் அதிகரித்தமையும் பிரதான காரணங்களாக இருந்தன.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

நிறுவகத்தினால் தொடர்ச்சியாக 15 மாதங்களாக ரூபா 20,000,000 தொகை நிபந்தனை வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் அந்தப் பணம் நிறுவகத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் நடவடிக்கையா அல்லது வேறு இலாபங்களைப் பெற்றுத்தரும் முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 நிதியத்தின் குறைந்த பயன்பாடு**

நிறுவகத்திற்குச் சொந்தமான 05 வங்கிக் கணக்குகளுக்குரிய ரூபா 37,648,113 கூட்டுத்தொகையான சராசரியான மாதாந்த பண மீதியொன்று குறைந்த பயன்பாட்டுடன் காணப்பட்டது.

**4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

நிறுவகத்தில் காணப்பட்ட கட்டிடத்தை அபிவிருத்தி செய்வதற்காக 2014 ஆம் ஆண்டின் போது பொதுத் திறைசேரியிலிருந்து பெறப்பட்ட ரூபா 12,000,000 தொகையான மூலதன நிதியேற்பாடு 2015 யூலை 30 ஆந் திகதி வரை உரிய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படாதிருந்ததுடன் 2013 மற்றும் அதற்கு முன்னர் கிடைத்த மூலதன நிதியேற்பாடு ரூபா 3,668,896 தொகையும் குறைந்த பயன்பாட்டுடன் காணப்பட்டது. அதன் படி 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலவு செய்யப்படாத நிதியேற்பாடு ரூபா 15,668,896 ஆகும்.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஆ) கணக்கீடு
(இ) நிதி முகாமைத்துவம்